

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் பெரிய மருதுபாண்டியர் 277வது பிறந்த நாளை முன்னிட்டு மருதுபாண்டியர் இளைஞர் நல அறக்கட்டளை நிறுவனரும் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளருமான பூக்கடை பாண்டி ஏற்பாட்டின் பேரில் அன்னதானத்தை கூட்டுறவு துறை அமைச்சர் – சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்.




கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வருகை தொடர்பாக மதுரை வடக்கு மாவட்ட திமுக மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பழங்காநத்தத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தனச்செல்வம், வக்கில் பாலாஜி, மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில விவசாய அணி கணேசன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி மதுரை பாலா, பகுதி செயலாளர்கள் சுதன், மதி வெங்கடேஷ், ராஜ கோடி, காவேரி, நாகஜோதி சிவா, சசி தேவா, ஒன்றிய செயலாளர்கள் திருக்குமரன், ஆர்.கே.ஜெயராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் திரளாக பங்கேற்றனர்.



திருச்செந்தூர் ஒன்றியம் தேரிகுடியிருப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி புதிய வகுப்பறை கட்டிடத்தினை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராமஜெயம், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், நகர செயலாளர் வாள் சுடலை, கிளைச் செயலாளர் ராஜேஷ்வரன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் மாவட்ட அறங்காவலர் தமிழழகன், வழக்கறிஞர் கிருபாகரன், சாத்ராக், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சலீம் கான், வி.பி.ராஜதுறை, முத்து மாணிக்கம், சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மாநில தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், தொகுதி பொறுப்பாளர்கள் வி.பி.ராசன், தேனி ஜெயக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெயராம், மாவட்ட அவைத் தலைவர் ஒச்சுபாலு ஆகியோர் முன்னிலையில் சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.கே.ஆறுமுகம், வைகை பரமன், பி.டி.மணிமாறன், ரவீந்திரன், செய்யது அபுதாஹிர், விஜயலட்சுமி பாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் பங்கேற்றனர்.



மதுரை மத்திய தொகுதி ஆரப்பாளையம் பகுதி 58வது வார்டு பாகம் 108 மாநகர மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியகராஜன் அறிவுறுத்தல் படி 'என் வாக்குச்சாவடி வெற்றிவாக்குசாவடி'என்னும் திண்ணை பிரச்சாரக் கூட்டம் பூங்கா நகர் பகுதியில் நடைபெற்றது. இந்த கூட்டதிற்க்கு தலைமை டி.வெள்ளிமுத்தன் 108 பாகமுகவர் (BLA2) வரவேற்புரையாற்றினார். சீனிரமேஷ் 58வது வட்டச் செயலாளர் முன்னிலை வகித்தார். மாநகர மாவட்ட துணை செயலாளர் திருமதி சின்னம்மாள், மாநிலபொதுக்குழு உறுப்பினர் வைகைபரமன், ஆரப்பாளையம் பகுதி செயலாளர் எஸ்.எஸ்.மாறன், மாநகர மாவட்ட ஆதிதிராவிடர் நலகுழு அமைப்பாளர் இ.எல்.பாலா, பகுதி கழக இளைஞர் அணி செயலாளர் நன்றி கூறினார். மாவட்டப் பிரதிநிதி உருடிரமேஷ், மாவட்டப் பிரதிநிதி பாண்டி, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து BLA2&BLC கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



விருதுநகர் பந்துவார்பட்டி ஊராட்சி மேலப்புதூர் கிராமத்தில் சமுதாயகூடம் கட்டிடத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமசந்திரன் அடிக்கல் நாட்டினார். உடன் சாத்தூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எ.கடற்கரைராஜ், கே.முருகேசன், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் குருசாமி, நகர கழக செயலாளர் மற்றும் கழக முன்னோடிகள் கிராம மக்கள் கலந்துகொண்டனர்.




இராமநாதபுரம் எம்.ஜி. மஹாலில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 2ஆவது கட்ட விரிவாக்கத்திட்டத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எ.ராஜகண்ணப்பன் மகளிர்களுக்கு உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டையினை வழங்கினார். உடன் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் , மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் ஆகியோர் உள்ளார்கள்.




ஒட்டன்சத்திரம் கேதையுறும்பு ஊராட்சியில் தமிழ்நாடு மின் பகிர்மான மற்றும் தொடர்மைப்பு கழகத்தின் சார்பில் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பீட்டில் 110/22 கிலோ வாட் அளவில் மூன்று ஏக்கர் பரப்பளவில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அர. சக்கரபாணி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் மாவட்டஆட்சியர் சரவணன், நகர செயலாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், பாலு, பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி பூதிப்புரம் பேரூராட்சியில் பூதிப்புரம் பேரூர் செயலாளர் பேரூராட்சி தலைவர் கவியரசு ஏற்பாட்டில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி" மற்றும் "தமிழ்நாடு தலைகுனியாது கூட்டம்" வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்ப்பன் மற்றம கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதி பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 33 ல் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2025–2026 கீழ் ரூபாய் பத்து லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் திறந்து வைத்தார் இந்நிகழ்வில் பரமக்குடி நகர்மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் மன்றத் துணைத் தலைவர் குணா, பரமக்குடி வட்ட வழங்கல் அலுவலர் கோகுல், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எம்.டி.அருளானந்த், நகர் மன்ற உறுப்பினர்கள் பழனி முத்துக்குமார், தர்மராஜ், நகர் துணைச் செயலாளர் கலீல் ரகுமான், நகர் பொருளாளர் ஜானகிராமன், வார்டு செயலாளர்கள் வீரபாண்டி மற்றும் சுரேஷ், தெற்கு நகர் இளைஞரணி துணை அமைப்பாளர் மனிஷ்,மதிமுக நகர் செயலாளர் பிச்சைமணி, இளைஞர் அணி நந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் அசரப் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி மண்டபம் ஒன்றியம், பிள்ளைமடம் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் மூலம் கட்டி முடிக்கப்பெற்ற புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தை இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் திறந்து வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள், ஆசிரிய பெருமக்கள், மாணவ செல்வங்கள், கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.